2002 மே 7]

முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய பொருளாதாரக் கொள்கையின்படி. இரப்பர் விலை மிகக் கடுமையாக வீழ்ச்சி அடைந்திருக்கிற காரணத்தினாலே இந்த இரப்பர் கழகம் மிகப் பெரிய நட்டத்தை ஈட்டிக் கொண்டிருக்கிறது என்றாலும் உறுப்பினர்களுடைய உணர்வுகளுக்கு ஏற்ப தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 302, திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்.

302—

கடைகள் ஒதுக்கீடு

***9679—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை, கோயம்பேட்டிலுள்ள காய், கனி, மலர் அங்காடிகளில் தற்போது ஒதுக்கீடு செய்யப்படாமல் இருக்கும் 295 கடைகள் ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோயம்பேட்டில் வணிக வளாகத்தில் உள்ள காய், கனி, மற்றும் மலர் அங்காடிகளில் ஒதுக்கீடு செய்யப்படாமல் இருக்கும் கடைகள் ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படமாட்டாது என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜார்ஜ் டவுன் பகுதியில் உள்ள நெருக்கடியைக் குறைக்கவும், போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்தவும், சுகாதாரத்தைக் காத்திடவும் 1986 ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் தீட்டப்பட்ட திட்டமாகும் இந்த கோயம்பேடு பகுதி காய், கனி, மலர் அங்காடிகள் திட்டம். தற்போது சதுர

[2002 மே 7

அடிக்கு ரூபாய் 3,000 வரை விலை நிர்ணயம் செய்து உள்ளதால், சிறு வியாபாரிகள் இந்தப் பெரும் தொகையைக் கொடுத்து, கடையை எடுத்து நடத்த முடியாத ஒரு சூழ்நிலை நிலவுவதாகக் கருதப்படுகிறது. ஆகவே, இந்த காய், கனி மற்றும் மலர் அங்காடிகளில் உள்ள கடைகளை விலை குறைத்து, வியாபார மக்கள் பயன்பெறுகின்ற வகையிலே விற்பனை செய்ய அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்பேடு அங்காடி தொடங்கிய காலத்திலிருந்து இங்கு கட்டப்பட்ட கடைகள் ஜார்ஜ் டவுன், பழைய கொத்தவால்சாவடி வியாபாரிகளுக்கும் மற்றும் இதர வியாபாரிகளுக்கும் மொத்த விலைக்கோ அல்லது தவணை முறையிலோ கடைகளுக்குரிய கிரயத்தைச் செலுத்த வேண்டுமென்ற அடிப்படையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. ஒதுக்கீடு செய்யப்பட்டவுடன் கடையின் விலையில் 20 சதவீதம் கட்ட வேண்டும். மீதியுள்ள சதவீதத்தை 10 வருட காலத்திற்கு 18 சதவீத வட்டி அடிப்படையில் செலுத்திவிடலாம். குறிப்பாக, ஜார்ஜ் டவுன், கொத்தவால்சாவடி பழைய வியாபாரிகளுக்கு சதுர அடி ஒன்றுக்கு விலை ரூ. 2,750 என்றும் மற்றபடி ஜார்ஜ் டவுன் வியாபாரிகள் அல்லாதவர்களுக்கு ரூ. 3,000/-என்றும் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இந்தக் கடைகளை வியாபாரிகள் வாங்கிட தடை ஏதும் இல்லாமல் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கடைகள் கட்டி முடிக்கப்பட்டு, பல ஆண்டு காலமாகப் பூட்டி வைக்கப்பட்டு இருக்கின்ற நிலையில் உள்ளன. குறிப்பாக 275-க்கும் அதிகமான கடைகள் தற்போது பூட்டிய நிலையில் உள்ளதால் அரசாங்கத்திற்குப் பெரும் அளவில் இலாப இழப்பீடும் ஏற்படுகிறது. இப்படி உள்ள 275 கடைகள் ஒப்பந்தத்தின் அடிப்படையிலோ அல்லது வாடகையின் அடிப்படையிலோ ஒதுக்கீடு செய்யப்படுமானால், அதன் மூலம் 275 குடும்பங்கள் மாத்திரம் அல்லாமல், அந்தக் கடைகளிலே வேலை செய்பவர்கள் 2,3 பேர்கள் என்று எடுத்துக்கொண்டால் கூட, கிட்டத்தட்ட 1,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குகின்ற ஒரு சூழ்நிலை ஏற்படும் என்பதால் இந்தக் கடைகளை ஒப்பந்தத்தின் அடிப்படையிலோ அல்லது வாடகையின் அடிப்படையிலோ ஒதுக்கீடு

2002 மே 7]

செய்ய அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வியாபாரிகளின் நலனைக் கருத்தில்கொண்டு, விலைக்குத்தான் இந்தக் கடைகளை விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஒப்பந்த அடிப்படையிலோ அல்லது வாடகை அடிப்படையிலோ எந்தக் கடையும் ஒதுக்கீடு செய்யப்பட மாட்டாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கடைகள் கட்டி பல ஆண்டுகள் ஆகிவிட்டன. பெரும் தொகை ஏற்கெனவே re-finance பெற்றுத்தான் இந்தக் கடைகளைக் கட்டியிருக்கிறார்கள். இப்படிக் கட்டப்பட்ட கடைகள் இதுவரை விலை போகாமல் இருக்கிறது என்று சொன்னால் இனி போகக்கூடிய வாய்ப்பு என்பது மிக மிகக் குறைவு. அப்படி இருக்கிற காரணத்தினாலே, அரசு சதுர அடிக்கு 2,500 ரூபாய், 3,000 ரூபாய் என்று நிர்ணயித்திருப்பதை மாற்றி ஒன்று விலையைக் குறைத்தாவது அரசு அதை வெளி மார்க்கெட்டிலே விற்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்; இல்லை என்று சொன்னால் P.W.D. rate ஏதாவது fix பண்ணி வாடகைக்காவது கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். கடன் வாங்கிக் கட்டிவிட்டு, இப்படி நீங்கள் அப்படியே மூடி வைத்தீர்கள் என்று சொன்னால், அரசாங்கத்தினுடைய அந்தத் துறை நிச்சயமாக நட்டத்தில்தான் போகுமேயொழிய இலாபத்தில் இயங்கக்கூடிய வாய்ப்பே இல்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் தொகையைக் குறைத்துக் கொடுத்தாவது வெளி market-லே அதை விற்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வியாபாரிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, வருடா வருடம் உயர்த்த வேண்டிய விலை மாற்றத்திற்கேற்ப உயர்த்த ஏதும் முடிவு செய்யப்படவில்லை. மற்றபடி மாண்புமிகு சட்டமன்ற

உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள் சொன்ன கருத்துகளை ஏற்று, அரசு இதுபற்றிச் சிந்திக்கும் என்ற முடிவைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. ஆறுமுகம்.

திரு. கே. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை கோயம்பேட்டிலே கட்டப்பட்டிருக்கிற *295* கடைகள் பல ஆண்டுகளாக மூடப்பட்டிருக்கின்றன. இதை குத்தகை அடிப்படையிலே கொடுக்க வாய்ப்பில்லை என்று நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். தனியார்களுக்குக் குத்தகை அடிப்படையிலே கொடுப்பதற்கு சிரமம் இருந்தாலும், இப்பொழுது காய்கறி மற்றும் பூ கூட்டுறவு உற்பத்தியாளர்கள் சங்கத்திற்காவது அதை உடனடியாகக் கொடுப்பதற்கு ஆவன செய்தால், அரசாங்கம் கட்டுகிற re-finance செய்திருக்கிற அந்த வட்டிக்காவது பணம் கிடைக்கும். தனியார்களுக்கு குத்தகைக்குக் கொடுத்தால் கூட, பல சட்டச் சிக்கல்கள் இருக்கும். ஆனால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அதுபோன்று கொடுத்தால், அவர்கள் அந்த விற்பனையிலே ஒரு குறிப்பிட்ட காலத் தொகையினை உபயோகிப்பதற்கு வாய்ப்பிருக்கும். அதனால் வட்டியாவது கிடைக்க வாய்ப்பிருக்கும் என்பதைச் சொல்லி, தங்கள் மூலம் அமைச்சர் அவர்கள் விடையளிப்பாரா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியாருக்கும் மற்றும் கூட்டுறவுச் சங்கத்திற்கும் குத்தகை அடிப்படையில் கொடுப்பதற்கு அரசு எந்தவித முடிவும் ஏற்படுத்தவில்லை. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளின்படி, இந்தக் கருத்துகளை அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *303*, திரு. கே.கே. சிவசாமி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

303—

கால்நடை மருத்துவனை

***6759—திரு. கே.கே. சிவசாமி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—